முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1033

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.07.2022, வியாழக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானிகள் துணைகொண்ட தேசிகா போற்றி
ஞானபண்டிதன் என் சக்தியாகவே
ஞானத்தை உலகோர்க்கு அருளுகின்ற ஞானியே போற்றி போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 12 நாள், 28.07.2022 வியாழக்கிழமை)
ஆற்றல்பட அரங்கனே கலியின் சிறந்த ஞானி
அரங்கனின் தர்மமே உயர்ந்த தர்மம்
3. தர்மத்தின் வழி தனை உலகம் பின்பற்ற
தரணியே தர்மலோகமாகி பாதுகாப்பை பெறக்கூடும்
கூடவே அரங்கனின் உபதேசம்
குவலயத்தை மாற்றும் மகா சக்தியாகும்
4. நாடெங்கிலும் அரங்கன் சன்மார்க்கமும் தர்மமும்
நாட்டிடுவேன் விரிந்து பரந்து வளர்ச்சி காண
காணவே உலகம் கடைத்தேற்றம் பெறும்
கலியிடர்களெல்லாம் விலகி ஓடி
5. ஞானயுகமாக இந்த கலியுகம் மாற்றங்காணும்
நன்மை கருதி அரங்கனை பின்பற்றி உலகோர் வர
ஞான சித்தி கண்டு கலியிலும்
ஞானிகளாகி அற்புதம் நிகழ்த்தக்கூடும்
6. கூடவே அரங்கன் வழி உலகம் வர
குறையிலா ஞானலோகமாகி
நாடெங்கிலும் ஞானஆட்சி
ஞானிகளாட்சியாக நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–